பதிவு எண்: ம. 6311 ★ தொலைபேசி: 51331 சிறுவிதை: 1958 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: சித்திரை 6 (18—4—68) வியாழன் ★ வெளியூர்: சித்திரை 7 (19 4 -68) வெள்ளி [இதழ்: 255

சட்டமன்ற மேலவை இடைத்தேர்தல்

சென்னை, ஏப். 18—

டாக்டர் அ. சிதம்பரநாதனுர் காலமானதால் ஏற்பட்ட காலி இடத்தை நிரப்புவதற்காகத் தமிழகச் சட்டமன்ற மேலவைக்கு வட ஆற்காடு—தென் ஆற்காடு ஆசிரியர் தொகுதியிலிருந்து ஏப்ரல் 22-ஆம் நாள் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை வாக்குப்பதிவு நடைபெறும்.

வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்கள் இத்தொகுதியில் அடங்குகின்றன.

பாரிசில் அறிஞர் அண்ணு

அமைச்சர் கருணுநிதியுடன் தொலைபேசித் தொடர்பு

நாளை அமெரிக்காவுக்குப் புறப்படுகிருர்

பாரிஸ், ஏப். 17—

தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கள் இத்தாலியிலிருந்து இன்று பிற்பகல் பிரான்சின் தலைநகரான பாரிஸ் நகர் வந்தடைந்தார்.

விமான நிலையத்தில், இந்தியத் தூதுவரக அதிகாரிகளும், பிரெஞ்சு நாட்டு அதிகாரிகளும், பிரான்ஸ் வாழ் தமிழர்கள் பலரும் வந்திருந்து அண்ணு அவர்களைச் சிறப்பான முறையில் வரவேற்றனர்.

அண்ணு அவர்கள் இன்றும் நாளையும் இங்கு தங்கி, எழில் கொழிக்கும் பாரிஸ் நகரின் முக்கிய இடங்களையும் கலைச் செல்வங்கள் நிரம்பியுள்ள இடங்களையும் சுற்றிப் பார்க்கிருர்கள்.

பாரிசில் உள்ள இந்தியத் தூதுவரகத்தில் தங்கியுள்ள அண்ணு அவர்கள், இங்குள்ள தமிழரான ஐ. நா. கல்வி நிறுவன இயக்குநர் திரு. மால்கம் ஆதிசேஷையாவையும், உலகத் தமிழ் மாநாட்டுத் தலைவர் திரு. பிலியோசாவையும் சந்தித்துப் பேசிவிட்டு, ஏப். 19-ம் நாள் அமெரிக்காவுக்குப் புறப்படுகிருர்.

அமைச்சர் கருணுநிதியுடன் தொலைபேசித் தொடர்பு

இந்திய நேரப்படி இன்று இரவு 10-30 மணிக்கு, தமிழகத்திலிருந்து அமைச்சர் கருணுநிதி அவர்கள், தொலைபேசி மூலம் அண்ணு அவர்களுடன் தொடர்புகொண்டு பேசினுர்.

அண்ணு அவர்கள் உடல்நலத்தோடும் உற்சாகத்தோடும் இருந்துவருகிருர்.

போப்புடன் அண்ணு சந்திப்பு

இன்று காலை, ரோம் நகரிலிருந்து புறப்படுமுன் வாடிகன் நகரடைந்து அங்குள்ள உலக கத்தோலிக்கக் கிறிஸ்துவ சமயத் தலைவரான போப் பாண்டவரை அண்ணு அவர்கள் சந்தித்தார்கள்.

போப்பாண்டவர் உடல் நலமில்லாதிருந்தும் அண்ணு அவர்கட்குப் பேட்டியளித்தார்; பதினைந்து நிமிட நேரம் அண்ணு அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தார்.

போப்பாண்டவரின் உடல் நிலை பற்றி அண்ணு அவர்கள் விசாரித்தார்.

அண்ணு அவர்கள், போப் பாண்டவருக்கு, திருக்குறள், தொல்காப்பிய நூல்களின் ஆங்கில மொழிபெயர்ப்பை அன்பளிப்பாக அளித்துவிடை பெற்றுக்கொண்டார்கள்.

அமெரிக்கா புறப்பாடு

அண்ணு அவர்கள் தம் உலகச் சுற்றுப் பயணத்தின் மூன்ருவது கட்டமாக, நாளை (ஏப்.19) பகல் 12-மணியளவில், விமானம்மூலம், எழில் கொழிக்கும் பாரிஸ் பட்டணத்திலிருந்து வளங்கொழிக்கும் அமெரிக்க நாட்டின் மிக முக்கிய நகரான நியூயார்க்கில் இறங்குகிருர்; இங்கிருந்துதான் அவருடைய அமெரிக்கச் சுற்றுப் பயணம் துவங்குகிறது.

அண்ணு அவர்களுடன் அவர்தம் தனிச் செயலாளர் திரு. கே. சொக்கலிங்கம் ஐ.ஏ.எஸ். அவர்களும் சுற்றுப் பயணம் செய்வது தெரிந்ததே.

ஊதியத்தைக் குறைத்துக் கொள்கிருர் ஆந்திரக் கவர்னர்

தம்முடைய பதவிக் காலத்தில்—தம்முடைய ஊதியத்தில் பத்தில் ஒரு பகுதியைக் குறைத்துக் கொள்வதென்று ஆந்திரத்தின் புதிய கவர்னர் , கந்துபாய் தேசாய், தாமாகவே முடிவு செய்திருக்கிருர்.

பஞ்சத்தை எதிர்நோக்கும் நிலை

விஞ்ஞானி எச்சரிக்கை

"மக்கள் தொகைப் பெருக்கத்தை, உரிய முறையில் தடுக்காவிட்டால், இன்னும் 10 ஆண்டுகளில் உலகம், பஞ்சத்தை எதிர்நோக்க வேண்டியிருக்கும்"

என்று ஆஸ்திரேலிய விஞ்ஞானி டாக்டர் கார்லஸ்பிச் என்பவர் எச்சரித்திருக்கிருர். அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:—

"அடுத்த முப்பது ஆண்டுகளில் உலக மக்கள் தொகை இருமடங்கு ஆகக்கூடும்; இதனைச் சமாளிக்க மும்மடங்கு உற்பத்தி செய்ய முடியுமா என்பதே இப்போதுள்ள கேள்வியாகும்."

தேசிய மாணவர் படையில் இந்திச் சொற்கள்

தமிழக அரசின் எதிர்ப்புக் குறித்து மத்திய அரசு

சென்னை, ஏப். 17—

'தேசிய மாணவர் யடையில் இந்திச் சொற்களைப் பயன்படுத்துவதை நீடித்தால், தமிழகத்தில் அப்படை கலைக்கப்படும்' என்று தமிழகச் சட்டமன்றத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தை, மறுஆய்வு செய்யுமாறு மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

"மேலைநாட்டுச் சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கள் சென்னை திரும்பியதும் மத்திய அரசுக்கு என்ன பதில் அனுப்புவது என்று ஆலோசனை செய்து முடிவெடுக்கப்படும்" என்று கல்வி அமைச்சர் திரு நெடுஞ்செழியன் கூறினுர்.

தேசிய மாணவர் படை தலைமை இயக்குநர் மேஜர் ஜெனரல் கன்னு, டில்லியிலிருந்து சென்னைக்கு வந்து அமைச்சர் நெடுஞ்செழியனைச் சந்தித்து உரையாடினுர்.

அனைத்து இந்தியப் போட்டிகளில் தமிழகத் தேசிய மாணவர் படையினர் ஆற்றியுள்ள பணி—பெற்றுள்ள வெற்றிகளை அவர், அமைச்சரிடம் எடுத்துக் கூறி, தமிழகத்தில் தேசிய மாணவர் படை தொடர்ந்து செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்; தமிழகத்தில் தேசிய மாணவர் படையின் எதிர்காலம் குறித்தும் கன்னு விவாதித்தார்.

தேசிய மாணவர் படையின் கட்டளைச் சொற்கள் இந்தியில் இருப்பதால், தமிழக மாணவர்கள் எந்த அளவுக்குக் கொதிப்படைந்திருக்கிருர்கள் என்பதை அமைச்சர் நெடுஞ்செழியன், கன்னுவிடம் எடுத்துரைத்தார்; 'இந்திச் சொற்களை நீக்கிவிட்டால் எதிர்ப்பு இருக்காது' எனவும் அவர் கூறினுர்.

நீக்ரோக்கள் உரிமைப் போரில் புகழ்பெற்ற திரைப்பட நடிகர்!

நடிப்புத் தொழிலைத் துறக்க முடிவு

ஹாலிவுட், ஏப். 18—

உலகப் புகழ்பெற்ற ஹாலிவுட் நடிகரான திரு. மார்லின் பிராண்டோ, தமது திரைப் படத்துறை ஈடுபாட்டைத் தற்காலிகமாக ஒதுக்கி வைத்துவிட்டு, நீக்ரோக்களின் குடியுரிமைப் போரில் தம்மை ஈடுபடுத்திக்கொள்ளப் போவதாக அறிவித்திருக்கிருர்;

இதுபற்றித் தாம் விரைவிலேயே ஓர் அறிக்கை விடுக்கவிருப்பதாகவும் அவர் கூறினுர்; அதில் அவர், குடியுரிமைப் போராட்டத்தில் தாம் எடுத்துக்கொள்ளவிருக்கும் பங்கு குறித்தும், தமது நோக்கம் குறித்தும் விளக்குவாராம்.

வாஷிங்டன் நோக்கி அணிவகுப்பு

வாஷிங்டன் நோக்கி எளிய மக்களின் (நீக்ரோ) அணிவகுப்பு ஒன்றைத் தலைமைதாங்கி நடத்திச் செல்ல ஏற்கனவே மார்ட்டின் லூதர் கிங் திட்டமிட்டிருந்தார். அந்த அணிவகுப்பு இப்போது, திரு. கிங் படுகொலை செய்யப்பட்ட இடத்திலிருந்து துவங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

டாக்டர் லூதர் கிங்குக்கு அடுத்தபடியாக, தென் பகுதி கிறித்துவப் பேரவையின் தலைவராகப் பதவியேற்றுள்ள டாக்டர் ரால்ப் அபெர்நதி, இந்த அணிவகுப்புக்குத் தலைமைதாங்க இருப்பதாக அவரே அறிவித்திருக்கிருர்.

"இந்த அணிவகுப்பில் மார்லின் பிராண்டோவும் பெரும்பங்கு எடுத்துக்கொள்வார் என்று பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது" என்று பேரவையின் துணைத் தலைவர் டாக்டர் ஆண்ட்ரு யங் தெரிவித்தார்.

கச்சத் தீவுச் சிக்கலில் டில்லியின் போக்கு!

நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சிகள் குற்றச்சாட்டு

கழக உறுப்பினர் கந்தப்பன் கடும் எச்சரிக்கை

புதுடில்லி, ஏப். 17—

கச்சத் தீவுமீது இந்தியாவுக்குள்ள உரிமையை அழுத்தந்திருத்தமாக எடுத்துக் கூறத் தவறியதற்காக மத்திய அரசுக்கு எதிராக மக்களவை எதிர்க் கட்சி உறுப்பினர்கள் ஒருமுகமாகச் சீறியெழுந்தனர்.

"கச்சத் தீவு உரிமை சம்பந்தமாக நிலவும் பிரச்சினையில் சரிவரக் கவனம் செலுத்தி ஆவன செய்ய மத்திய அரசு தவறிவிட்டது; ஒருவிதமான ஆதிக்கத்தை அதன் மீது செலுத்த இலங்கை அரசுக்கு இடந் தந்துவிட்டது" என்றெல்லாம் மத்திய அமைச்சரவைமீது எதிர்க் கட்சியினர் குற்றஞ்சாட்டினர்.

தி. மு. கழக உறுப்பினர் செ. கந்தப்பன் அவர்கள், 'நான்கு ஆண்டுகளாக மத்திய அரசு, இப்பிரச்சினையைக் கவனிக்காமலே வாளாவிருந்துவந்திருக்கிறது" எனச் சுட்டிக்காட்டினுர்.

"இது மிகவும் நாசூக்கான பிரச்சினை; பொது நலனை முன்னிட்டு விவரங்களை வெளியிடுவது உசிதமானதல்ல என நினைக்கிறேன்" என்று வெளிவிவகாரத் துணையமைச்சர் பி. ஆர். பகத் கூறியபோது, உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்; 'எவ்விதம் இலங்கை அரசு இத்தீவில் அதிகாரம் செலுத்துகிறது என்பதையெல்லாம் பத்திரிகைகள் எழுதிய பின்னரும்கூட, 'பொது நலனுக்கு உரியதல்ல எனக் கூறுவதெல்லாம் வெற்றுப் பேச்சாகும்' என்று பி.சோ. உறுப்பினர் ஜாரஜ் பெர்னண்டசு குறுக்கிட்டுக் கூறினுர்.

கந்தப்பன் எச்சரிக்கை

கழக உறுப்பினர் செ. கந்தப்பன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

"இத்தீவு மீது இலங்கை அரசுக்கு ஆதிபத்திய உரிமை இருப்பதாக ஒப்புக்கொள்வதாக இருந்தால், அதன் விளைவுகள், பெரும் அளவில் நம்மைப் பாதிக்கும் என்பதை உணரவேண்டும்.

"இந்தியாவின் மீன்பிடி உரிமைகளையும், முத்துக் குளித்தல் உரிமையையும் இது பாதிக்கும்; சேதுக்கடல் திட்டத்துக்கும் தடையாக இருக்கும்."

நம்நாடு
ஆசிரியர் : இரா. செழியன்

திருவள்ளுவராண்டு 1999 சித்திரை 6 (18—4—68) வியாழன்

சுப்பிரமணியம் பெற்ற வெகுமதி

தமிழ்நாடு காங்கிரசுக் கட்சியின் தலைவராக சுப்பிரமணியம் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதைக் கண்டதும், சனநாயக அமைப்பில் எவ்வாறு எதிர்க் கட்சி செயல்பட வேண்டும் என்பதற்கான முன்மாதிரியை—தமிழ்நாடு காங்கிரசுக் கட்சி இனி செயல்படுவதன் வாயிலாக—உருவாக்கக்கூடும் எனச் சிலர் எதிர்பார்த்தனர். பொறுப்புள்ள எதிர்க் கட்சி எப்படிச் செயல்பட வேண்டுமோ அவ்வாறு காங்கிரசுக் கட்சி செயல்படப்போவதாகவும் புதிய தலைவர் சுப்பிரமணியம் பறைசாற்றினர்.

ஆனால், சிலர் எதிர்பார்த்ததுபோலவும், சுப்பிரமணியம் அவர்களே வெளிப்படையாகக் கூறியதுபோலவும், 'சிறந்த எதிர்க் கட்சி' எனக் கொள்ளத்தக்க வகையில் காங்கிரசுக் கட்சி செயல்பட முனையவில்லை. பழைய அரசியல் சகதியிலேயேதான், அக்கட்சி மூழ்கித் திளைத்துக்கொண்டிருக்கிறது.

எந்தவிதப் புது மாற்றத்தையும் காங்கிரசுக் கட்சி பெற்றிடவில்லை. தானே உருவாக்கிய அருவருக்கத்தக்க பழைய பாதையிலேயேதான் காங்கிரசுக் கட்சி நடைபோட்டுக்கொண்டிருக்கிறது.

தலைமையில்தான் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது; காங்கிரசுக் கட்சியின் போக்கிலும், செயல்முறையிலும் கடுகளவு மாற்றமும் ஏற்பட்டுவிடவில்லை.

எதற்கெடுத்தாலும் ஆளும் கட்சியை—கழகத்தைக் குற்றம் கூறுவது—கழக ஆட்சியின்மீது உண்மைக்கு முழுதும் மாறான குற்றச்சாட்டுகளைச் சுமத்துவது—'சட்டம், அமைதி குலைந்துவிட்டது' எனக் கூக்குரலிடுவது—'நிர்வாகத்தில், கழகத்தவர் குறுக்கிட்டுக் கொண்டிருக்கின்றனர்' எனக் கூப்பாடு போடுவது போன்ற திருப்பணியைத்தான் தீவிரமாக சுப்பிரமணியம் அவர்கள்—'தமிழகக் காங்கிரசுக் கட்சித் தலைவர்' என்ற முறையில்—துணிந்து செய்துகொண்டிருக்கின்றார். ஆளும் கட்சியாக இருந்துகொண்டு காங்கிரசுக் கட்சி, எதை எதைச் சொல்லி—எப்படி எப்படியெல்லாம் கழகத்தைத் தூற்றிவந்திருக்கின்றதோ, அதே முறையைப் பின்பற்றி—அதே தூற்றுதலைத் தொடர்ந்து இன்றும் காங்கிரசுக் கட்சி செய்துகொண்டிருக்கிறது.

தமிழக ஆட்சிப் பொறுப்பில் காங்கிரசு இருந்த நேரத்தில், 'காங்கிரசுக் கட்சிப் பிரசாரகன்' என விளம்பரப்படுத்தப்பட்ட நடமாடும் 'நாப்பறை'கள், எத்தகைய இழிசொற்களால் கழகத்தையும், கழகத் தலைவர்களையும் இழித்துப் பழித்துப் பேசி வந்தனவோ—அதே திருப்பணியைத்தான், 'எதிர்க் கட்சி' என்ற முறையிலும் அந்த 'நாப்பறை'கள் இன்றும் செய்துவருகின்றன. மேடைப் பேச்சுக்கள்தான் இப்படிக் கர்ணகடூரமாக இருக்கின்றன என்பதில்லை; எழுதப்படுகின்ற எழுத்துக்கள், அந்த 'நாப்பறை'களின் நாவிலிருந்து வருகின்ற நெடிநாற்றம் வீசும் நாராசச் சொற்களைவிட, நூற்றுக்கு நூறு துர்நாற்றம் வீசுகின்றன.

அன்றிருந்த தலைமையின்கீழ் காங்கிரசுக் கட்சி புரிந்துவந்த திருவிளையாடலைவிட, சுப்பிரமணியம் தலைமையில் இயங்கக்கூடிய இன்றையக் காங்கிரசு, விரும்பி வரவேற்கத் தகுந்தபோக்கில் செயல்பட்டு வரவில்லை. தலைமையிலும் நிலைமையிலும்தான் காங்கிரசுக் கட்சி மாற்றம் பெற்றிருக்கின்றதே அல்லாது, போக்கிலும் செயல் முறையிலும் அன்றுபோல்தான் இன்றும் இருந்துவருகிறது.

காங்கிரசுத் தலைவர் சுப்பிரமணியம் அவர்களின் நெஞ்சில் இடம் பெற்றிருக்கின்ற 'தேசீய உணர்வு' எத்தகையது என்பதைத் தமிழக மக்கள் தெளிவாகத் தெரிந்துகொண்டுவிட்டனர். 'தேசீய உணர்வு' அவர் நெஞ்சில் இடம் பெறவே பெருது என்பதற்கு—சங்கரி இடைத்தேர்தலில் காங்கிரசுக்கு ஆதரவு கோரி சுப்பிரமணியம் அவர்கள், வாக்காளர்களிடம் செய்த நச்சுத்தன்மை கொண்ட பிரசாரமே போதியதாகும்.

மாணவர்களை எப்படியாவது காங்கிரசு வலையில் வீழ்த்த சுப்பிரமணியம் அவர்கள், காங்கிரசுத் தலைமைப் பதவியை ஏற்றுக்கொண்டவுடனேயே தீவிரமான முயற்சியை மேற்கொண்டார். அம்முயற்சியில் அவர் வெற்றிபெறவில்லை என்பதுடன், அவருடைய நாக்கே அவருக்கு, மாணவர்களின் தீவிரமான எதிர்ப்பைத் தேடிக் கொடுத்துவிட்டது.

தாம் போகின்ற இடங்களிலெல்லாம், மாணவர்களின் எதிர்ப்பையே அவர் சந்தித்துவந்தார். துவக்கத்தில், பேச்சுரிமை பற்றிப் பேசிய உரிமை வீரர், மாணவர்களின் சீற்றம் பொங்கி வழிவதைக் கண்டதும், பேச்சுரிமை கோரலுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, மாணவர்களைக் குறித்துப் பழித்துக்கூறியதைத் திரும்பப் பெற்றுக்கொண்டுவிட்டார். இந்தச் சூழ்நிலையில், அவருக்குக் கிடைத்த வெளிநாடு செல்ல வேண்டிய நிலைமை அரிய வாய்ப்பாக அவருக்கு அமைந்தது.

வெளிநாடுகளுக்குச் சென்று திரும்பியதும், விட்டுச் சென்ற இடத்திலிருந்து, கழக ஆட்சியைத் தூற்றும் பணியை மீண்டும் அவர் உடனடியாகத் தொடங்கிவிட்டார். வெறும் வாயை மென்று மென்று பழகிவிட்டிருக்கின்ற அவருக்கு, சென்னை நகரத்தில் எதிர்பாராமுறையில் நிகழ்ந்துவிட்ட மாணவர்—போக்குவரத்து ஊழியர் மோதலும், அதுபற்றி ஆராய்ந்து கூற நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுத் தலைமையும், அவல்போல அவருக்குக் கிடைத்துவிட்டது.

அந்த அவலை வாயில் போட்டு மெல்லுகின்றார் சுப்பிரமணியம்; அவ்வாறு மெல்லுவது அவருக்குச் சுவையாக இருக்கிறது; எனவே, அது தரக்கூடிய சுவையின் மயக்கத்தில், தாம் அமைச்சராக இருந்துவந்த காலத்தில் செய்யத் தவறியதை மறந்துவிட்டு, தாம் செய்ய விரும்பாத அதையே, 'ஏன் இன்றையக் கழக ஆட்சி செய்யக்கூடாது' என்ற கேள்வியையும் கேட்டிருக்கின்றார்.

இக்கேள்விக்கு, முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள்—சுப்பிரமணியம் அவர்கள் வெட்கித் தலைகுனியத்தக்க முறையில்—விளக்கம் தந்திருக்கின்றார்; அந்த விளக்கம், ஆங்கில—தமிழ் நாளிசழ்கள் அனைத்திலும் வெளியாகியுள்ளன; அதை இங்கு அப்படியே வெளியிடுகின்றோம்:—

"சுப்பிரமணியம் அவர்கள் இந்த மாநிலத்தில் பத்து ஆண்டுகள்வரை முக்கிய அமைச்சராக இருந்தாரே எந்த ஒரு துப்பாக்கிச் சூடு சம்பவத்திலாவது அவர், உயர் நீதிமன்ற நீதிபதி தலைமையில் நீதி விசாரணை நடத்த உத்தரவிட்டது உண்டா? அல்லது தமிழ்நாட்டின் வரலாற்றிலேயே எந்த ஒரு துப்பாக்கிச் சூடு நிகழ்ச்சியின்போதாவது உயர் நீதிமன்ற நீதிபதியைக் கொண்டு நீதி விசாரணை நடத்தப்பட்டதாக அவரால் மெய்ப்பிக்க முடியுமா?"

என முதலமைச்சர் அண்ணா அவர்கள் கேட்டிருக்கின்றார்.

"பத்தாண்டுக்காலம் அவர் இந்த மாநிலத்தின் அமைச்சராக இருந்தார்; அப்போது முதுகுளத்தூரில் போலீசுத் துப்பாக்கிச் சூடு நடந்திருக்கிறது—

சென்னைத் துறைமுகத் தொழிலாளர் வேலைநிறுத்தத்தின்போது துப்பாக்கிச் சூடு நடந்திருக்கிறது—

அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர் போராட்டத்தின்போது, துப்பாக்கிச் சூடு நடந்து ஒரு மாணவர் உயிரிழந்திருக்கின்றார்—

அப்போதெல்லாம், உயர் நீதிமன்ற நீதிபதியை வைத்து விசாரணை நடத்தாதது ஏன்? அப்போது பதவியிலிருந்த சுப்பிரமணியம் இதைச் செய்திருக்கலாமே!

எந்தத் தரப்பிலிருந்தும் கோரிக்கை வராமலேயே நீதி விசாரணைக்கு நானே உத்தரவிட்டேன்."

இக்கேள்வியையும் கேட்டு—விளக்கத்தையும் தந்துள்ள முதலமைச்சர் அண்ணா அவர்கள், 'நீதிபதி விசாரணையைப் பற்றிக் குறைகூறும் சுப்பிரமணியம் அவர்கள், அரசியல் காரணத்துக்காகவே பிரச்சினையைக் கிளப்பியிருக்கின்றார்' என்ற உண்மையையும் குறிப்பிட்டிருக்கின்றார்.

இதுவுமன்றி, டெல்லியில் காமராசர் தங்கியிருந்த வீட்டை நாசப்படுத்தி, அவ்வீட்டுக்குத் தீ வைக்க சாமியார்கள் முயற்சித்த நிகழ்ச்சியைக் குறிப்பிட்டுவிட்டு,

"மாஜிஸ்திரேட் விசாரணைக்குத்தானே உத்தரவிடப்பட்டது"

என்ற உண்மையையும் வெளிப்படுத்தியிருக்கின்றார் அண்ணா அவர்கள். இனியாவது சுப்பிரமணியம் அவர்கள், முன்னாள் தாம் செயல்பட்ட முறையை மறந்துவிட்டு, அரசியல் காரணத்துக்காகக் கழகத்தைத் தூற்றுவதை நிறுத்திக்கொள்ளுவாராக!

—கா. க.

வீரமும் தியாகமும் புரிந்த வெற்றித் திருநகர்

சென்னையுடன் நட்புறவு கொண்டுள்ள வால்கா கிராடு

மாநகராட்சிகளிடையே நல்லெண்ணத் தூதுக் குழுக்கள் பரிமாற்றம்

சோவியத் யூனியனின் வரலாற்றில் புகழ்வாய்ந்த நகரங்களில் ஒன்றான வால்காகிராடு மாநகராட்சியின் சார்பில் நட்புறவுத் தூதுக் குழு ஒன்று சென்னை வந்துள்ளது. அந்த மாநகராட்சியின் துணை மேயர் திரு. அலெக்சாந்தர் மெஷின், தூதுக் குழுவின் தலைவராவார். மற்றும் வால்கா கிராடு டிராக்டர் தொழிற்சாலை இயக்குநர் திரு. தெசியதோவும், நகர சோவியத் ஊழியர் திரு. அலெக்சாந்தர் பண்டிகோவும், குழுவில் உறுப்பினராக உள்ளனர். இத்தூதுக் குழுவின் வருகையையொட்டி, இக்கட்டுரை வெளியிடப்படுகிறது:—

1925-ஆம் ஆண்டு வரை 'ஜாரிட்சின்' என்றழைக்கப்பட்டு — 1925-லிருந்து 1961 வரை 'ஸ்டாலின்கிராடு' என்ற பெயர் தாங்கி — இரண்டாவது உலகப் போரின்போது உலகப் பத்திரிகைகளில் பிரபலமடைந்த நகரமே வால்கா கிராடு! நெருப்பாற்றில், இடிபாடுகளுக்கிடையே எதிர்நீச்சல் போட்டு, இட்லரின் படைகளைத் தோல்வியைச் சுவைக்கவைத்த வீரநகர், வால்கா கிராடு!

பிற இரஷ்ய நகரங்களுடன் ஒப்பிட்டால், வால்காகிரேடு அவ்வளவு பழமையானதல்ல; ஜாரிட்சின் நகர் 1589-ம் ஆண்டில் நிறுவப்பட்டது

ஜாரிட்சா, வால்கா நதிகள் கலக்குமிடத்தில் உள்ள தீவில், ஒரு பாதுகாப்புக் கோட்டை நகராகத் தோன்றியது

இரஷ்யாவின் தென் எல்லைகளைப் பாதுகாக்கும் எல்லைப் பாதுகாப்பு நகராக ஆரம்பகாலத்தில் இருந்த இந்நகர வளர்ச்சியடைந்து, வால்கா நதியின் மேல்கரையிலும் விரிவடைந்தது; இப்பொழுது நவீன வால்கா கிராடு நகரம் இருப்பது இங்குதான்.

இரஷ்ய அரசு வலுப்பெற்று, விரிவடைந்தது போன்றே ஜாரிட்சினும் வளர்ச்சியுற்றது. அதிலும், குறிப்பாக 19-வது நூற்றுண்டின் பிற்பகுதியில் இந்நகரை, நாட்டின் பிற நகர்களுடன் இணைக்கும் இரயில் பாதைகள் போடப்பட்ட பின்னர், இதன் வளர்ச்சி துரிதமடைந்தது

வால்கா நதிப் போக்குவரத்தும் வளர்ச்சியுற்றதனால், பல மரமறுக்கும் தொழிற்சாலைகளும், இரும்பு—உருக்கு ஆலைகளும் இங்கு தோன்றின.

1917-ல் இந்நகரின் மக்கள் தொகை 1,35,000 ஆகும்; இதில் 35,000 பேர் தொழிலாளர்.

அக்டோபர் புரட்சி 1917 நவம்பரில் பெட்ரோகிராடில் வெற்றியடைந்த சில நாட்களுக்குப் பின்னர் ஜாரிட்சின் நகரிலும் சோவியத் ஆட்சியைப் புரட்சிகரத் தொழிலாளி வர்க்கம் நிறுவியது.

உள்நாட்டுப் போர் நடைபெற்ற காலத்தில் இந்நகரிலும், சுற்றுப்புறங்களிலும் செஞ்சேனைக்கும்—வெண்படையினருக்கு மிடையே பல கடுமையான போர்கள் நடைபெற்றுள்ளன. இந்த நாட்களில், வால்கா நதிக்கரையில் அமைந்த இந்நகர், அதன் போராட்டத் திறனுக்குப் பெயர்பெற்று விளங்கிற்று. எதிர்ப்புப் புரட்சியாளர்களை வீழ்த்த நடைபெற்ற போராட்டத்தில், தன்னலமற்று ஈடுபட்டு வெற்றி பெற்றமைக்காக இந்நகருக்கு 'செம்பதாகை' விருது வழங்கப்பட்டுள்ளது.

உள்நாட்டுப் போர் முடிவடைந்த பின்னர், ஜாரிட்சின் மக்கள் புனர் நிர்மாண வேலையிலும் முழுமூச்சுடன் இறங்கினர்; டிராக்டர் ஆலை, கப்பல் கட்டும் தளம், மின் நிலையம், உருக்காலை ஆகிய புதிய தொழில்கள் இந்நகரில் தோன்றின; விரைவில் சோஷலிசத் தொழில் துறையில் ஒரு பெரும் மையமாக விளங்கிற்று ஸ்டாலின்கிராடு.

1941-க்குள் 126 தொழில் நிறுவனங்களைக் கொண்டிருந்த இந்நகரின் மொத்த உற்பத்தி 1913-ஐ காட்டிலும் 17 மடங்கு அதிகமாக இருந்தது.

வீரப் போரில் பெற்ற விழுப் புண்கள் பல

வரலாற்றிலேயே மிகக் கொடியதான இரண்டாவது உலகப் போரில் ஈடுபட வேண்டியதிருந்தது இந்நகர்! இங்குதான்—வால்கா ஆற்றின் இந்தக் கரையில்தான்—சோவியத் நாட்டின் தலைவிதி மட்டுமல்ல; பல நாடுகளின் தலைவிதியும், இலட்சோப இலட்சம் மக்களின் 'தலைவிதி'யும் நிர்ணயிக்கப்பட்டது எனக் கூறலாம்!

1942-ம் ஆண்டு கோடை, இலை உதிர் காலம், பனிக்காலம் ஆகியவற்றினூடே 200 நாட்கள் இங்கு போர் நடந்தது 20 இலட்சம் மக்களைப் பாதித்த 35,000 சதுர மைல் பரப்பில் 25,000 துப்பாக்கிகளும், பிரங்கிகளும், ஏறக்குறைய 5,000 விமானங்களும், டாங்கிகளும் அனல் கக்கிக் கொண்டிருந்தன! நகர், சாக்காடாகக் காட்சியளித்தது!

இந்நகரைப் பாதுகாத்த வீரர்கள், ஏறக்குறைய இட்லரின் மிகச் சிறந்த படைப் பகுதிகளில் 50-ஐ நிர்மூலமாக்கினர்!

1943 சனவரி 10-ம் நாள், டாங் அணிப் படையினருக்கு, அகப்பட்டுக்கொண்ட எதிரிகளை ஒழித்துக்கட்டும் பணி தரப்பட்டது; அப்படையினர் அன்றுதான் தங்களது தாக்குதலைத் தொடுத்தனர்; ஜெர்மன் துருப்புக்களின் அணியை இரண்டாகப் பிளவுபடுத்தி, அவர்களை முறியடித்தனர்!

பிப். 2-ம் நாள் சுடுவது நின்றது; இரண்டாவது உலகப் போரிலேயே சோவியத் யூனியனுக்கும்—நட்பு நாட்டினருக்கும் சாதகமான திருப்புமுனையாக அமைந்தது ஸ்டாலின் கிராடு போர்தான்!

வால்கா ஆற்றுக்கரையில் நடைபெற்ற இப்போரில், 5,87,800 ஜெர்மன் படையினர் கொல்லப்பட்டனர்; 2,28,700 பேர் கைதிகளாகப் பிடிக்கப்பட்டனர்.

இந்நகரை ஒரு நாசக் குவியலாக்கிற்று போர்! 42,000 குடியிருப்புக்களும், அநேகமாக எல்லாத் தொழில் நிறுவனங்களும், நகரக் குடிதண்ணீர் வசதி—போக்குவரத்து—பாதாளச் சாக்கடைகள் அனைத்தும் தகர்ந்தன!

இந்தப் போரினால் நகருக்கு ஏற்பட்ட இழப்பு 100 கோடி ரூபிள்கள் என்று கணக்கிடப்பட்டது.

எதிரியின் குண்டு வீச்சுக்கு இரையாகி மடிந்த சாதாரண மக்கள் 42,000 பேராவர்!

அதற்குப் பின்னர், அரசினால் அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின்படி நகர் புத்துயிர் பெறத் தொடங்கியது; இடிந்து—நாசமாகி அழிவின் சின்னங்களாக இருந்த நகரை, புதியதொரு நவீன நகராக்கும் பணியில் ஈடுபட்டனர் மக்கள். ஒன்றன்பின் ஒன்றாகத் தொழிற்சாலைகள் இயங்கத் தொடங்கின!

(3-ம் பக்கம் பார்க்க)

மற்ற மாநிலங்களுடன் தமிழகத்தை ஒப்பிட்டுப் பார்ப்பீர்!

சேதாரங்களைத் தவிர்த்த வேறு மாநிலங்கள் எவை?

காங்கிரசு ஆட்சியில் நீதி விசாரணை நடத்தியதுண்டா?

சி. சுப்பிரமணியத்திற்கு இரா. நெடுஞ்செழியன் பதில்

சென்னை, ஏப். 18—

"கடந்த ஓராண்டுக் காலத்தில் அனைத்திந்தியாவிலும் நடந்த நிகழ்ச்சிகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தமிழ்நாட்டில்தான் சேதங்கள் குறைவாக ஏற்பட்டிருக்கின்றன. இந்த அளவுக்குச் சேதாரக் குறைவை வேறு எந்த மாநிலத்திலாவது காட்டமுடியுமா?

"ஆங்கில ஒழிப்புக் கிளர்ச்சியின் பேராலும் வேறு பல்வேறு கிளர்ச்சிகளின் பேராலும் உ.பி. மாநிலத்திலும், வங்காளத்திலும், ஆந்திரத்திலும், மைசூரிலும் மற்றும் பல இடங்களிலும் எவ்வளவு ரகளைகள் நடந்தன? எத்தனை பஸ்கள் கொளுத்தப்பட்டன? எவ்வளவு கொலை-கொள்ளை, துப்பாக்கிச் சூடுகள் நடைபெற்றிருக்கின்றன? தமிழகத்தில் அப்படி நடந்ததா? ஒரு முறையாவது இங்கே ஊரடங்குச் சட்டத்தைச் செயல்படுத்தியதுண்டா?

"வேறு மாநிலங்களில் இவ்வளவு சேதாரங்கள் ஏற்பட்டிருந்தபோதிலும் அந்த அளவுக்கு இங்கு ஏற்படாமல் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டிய பெருமை, நமது காவல் துறையையும், அதனை நடத்திச் செல்லும் அறிஞர் அண்ணா அவர்களையுமே சாரும்.

"அடிப்பது, சுடுவது என்பது மிகமிகச் சுலபமான வேலை! போலீசார் கையிலே தடி வைத்திருப்பது வேடிக்கைக்காகவா? போலீசு நிலையத்தில் துப்பாக்கிகள் இருப்பது குருவி சுடுவதற்கா? இருந்தாலும், அவற்றையெல்லாம் கூடியவரையில் பயன்படுத்தாமல் அமைதி காப்பதுதான் திறமையான செயலாகும்!

"இங்கே மொழிக் கிளர்ச்சி மூண்டபோது போலீசார் சுட்டிருந்தால் என்ன ஆகியிருக்கும்? எத்தனை பஸ்கள் எரிந்திருக்கும்? எத்தனை இழப்புக்கள் ஏற்பட்டிருக்கும்?

"ஆகையினால்தான் அறிஞர் அண்ணா அவர்கள், 'உடைமைகளை இழந்தால் மீண்டும் அவற்றை உருவாக்கிவிட முடியும்; ஓர் உயிரை இழந்தால் மீண்டும் அந்த உயிரை என்னால் பெற்றுத்தர முடியாது; உடைமைகளைக் காப்பதைவிட உயிரைக் காப்பதையே விரும்புகிறேன்' என்று கூறினார்கள்.

"மற்ற மாநிலங்களில் துப்பாக்கிச் சூட்டால் இறந்தவர்கள் தொகை என்ன என்பதையும், இங்கே தமிழ்நாட்டில் துப்பாக்கிச் சூடு எந்த அளவுக்குத் தவிர்க்கப்பட்டிருக்கிறது என்பதையும் கணக்கிட்டுப் பார்த்தால் தெரியும்.

"இப்படிப்பட்ட ஆட்சியில்தான், 'சட்டம்-ஒழுங்கு கெட்டுவிட்டது' எனக் காங்கிரசுக்காரர்கள் கூறுகிறார்கள்; 'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்—அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு' என்று வள்ளுவர் கூறியதைப்போல், யார் யார் எதைச் சொன்னாலும் அதில் உள்ள உண்மையை ஆராய்ந்து பார்க்க வேண்டும்"

என்று, கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், கோடம்பாக்கத்தில் நடந்த கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்கள்.

சென்னை 92-வது வட்டம் திருவள்ளுவர் படிப்பகச் சார்பில் நடந்த இந்தப் பொதுக்கூட்டத்தில் காஞ்சி மணிமொழியார், எம். குமார், வில்லாளன், இராசன், பி. ஏ. கணபதி ஆகியோர் பேசினர்.

அமைச்சர் மேலும் பேசுகையில் கூறியதாவது:—

'சென்னையில் நடந்த உலகத் தமிழ் மாநாட்டில் இருபது இலட்சத்துக்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர்; அவ்வளவு பெரிய நிகழ்ச்சியில் ஒரு சேதாரம் ஏற்பட்டதுண்டா? அமைதியைக் குலைக்கும் ஒரு செயல் உண்டா?

மாநாடு முடிந்து கலை நிகழ்ச்சிகளையெல்லாம் கண்டுவிட்டு நள்ளிரவு 2½-மணிக்குக்கூடத் தாய்மார்களெல்லாம் நடந்தே வீடு திரும்பினரே—யாருக்கேனும் ஏதேனும் தொல்லை ஏற்பட்டதா?

கும்பகோணத்திலே இருபது இலட்சம் பேருக்குமேல் கூடிய மகாமகத் திருவிழா நடந்ததே—அங்கு ஏதேனும் அசம்பாவிதம் நடந்ததுண்டா?

மகாமகத்தில் போலீசார் ஆற்றிய பணி குறித்துக் காங்கிரசு சட்டமன்ற உறுப்பினர் திரு. காசிராமன் அவர்களே ஒரு முறைக்கு மூன்று முறை சட்டமன்றத்தில் பாராட்டுத் தெரிவித்தாரே!

அதேபோல் உலகப் பொருட்காட்சியில் பல இலட்சம் பேர் கலந்து கொண்டார்களே—யாருக்கேனும் ஒரு தீங்காவது ஏற்பட்டதா? எவ்வளவு அமைதியாக மக்கள் வந்து கண்டு களித்துச் சென்றனர்!

'தமிழகத்திலே சட்டம்—ஒழுங்கு கெட்டுவிட்டது; நான் வெட்கித் தலைகுனிய நேரிட்டது' என்று கூறும் சுப்பிரமணியத்தைக் கேட்கிறேன்—இங்கு சட்டமில்லை—ஒழுங்கு இல்லை என்றால் அமெரிக்காவிலே நடந்ததற்கு என்ன பெயர்?

அமெரிக்காவில் மார்ட்டின் லூதர் கிங் கொல்லப்பட்டதையடுத்து நேற்றைக்கு முன்னாள் வரை கிடைத்துள்ள கணக்குப்படி 141 நகரங்கள் பற்றி எரிந்திருக்கின்றன; 18,000 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்; 3,000 பேர் படுகாயமடைந்திருக்கின்றனர்; 38 பேர் செத்திருக்கின்றனர்; நியூயார்க் நகரில் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டது; அப்படி ஏதேனும் தமிழகத்தில் நடந்ததா? அந்த அமெரிக்காவிலிருந்து திரும்பிய சுப்பிரமணியம்தான் சொல்கிறார்—'எனக்குத் தலைகுனிவு ஏற்பட்டு விட்டது' என்று!

காமராசர் ஆட்சியில் முதுகுளத்தூரில் ஊர் ஊராகப் பற்றி எரிந்ததே—6 பேரை ஏரிக்கரையில் நிறுத்திவைத்துச் சுட்டார்களே—அந்தக் கலகத்தைத் தடுத்து நிறுத்தும் ஆற்றல் காமராசருக்கு இல்லாதிருந்ததே—அதற்கு என்ன அர்த்தம் காங்கிரசார் அகராதிப்படி?

அதுபற்றி நீதி விசாரணை நடத்தக் கேட்டோமே—நீதி விசாரணை வைத்தார்களா? காங்கிரசு ஆட்சிக் காலத்தில் ஏதாவது ஒரு நிகழ்ச்சிக்காவது நீதி விசாரணை நடத்தப்பட்டதுண்டா?

பக்தவத்சலம், பொள்ளாச்சியிலும் மற்ற இடங்களிலும் இராணுவத்தையும், போலீசையும் ஏவி சுட்டுத் தள்ளினாரே மக்களை—அவர் கணக்குப்படி 50 பேர் செத்தார்களே—அதற்கு நீதி விசாரணை வைத்ததுண்டா?

அறிஞர் அண்ணா அவர்கள், யாரும் கேட்காமலே தாமே முன்வந்து, பஸ் தொழிலாளர்—மாணவர் மோதல் பற்றி நீதி விசாரணை நடத்த உத்தரவிட்டார்; இதைப் பாராட்ட வேண்டாமா காங்கிரசுக்காரர்கள்?

காந்தியார் பட்டப் பகலில் சுடப்பட்டாரே! அமெரிக்காவில் கென்னடியும், ஆபிரகாம் லிங்கனும் சுடப்படவில்லையா? இப்படியெல்லாம் எதிர்பாராதவிதமாக நடைபெறுவதை எப்படி முன்கூட்டித் தடுக்க முடியும்? இப்படி நடந்துவிட்டதால், 'சட்டம்-அமைதி கெட்டுவிட்டது' என்று கூற முடியுமா?

அதே போலத்தான், சென்னையில் மாணவர்—பஸ் தொழிலாளர் தகராறு முற்றி மின்னல் வேகத்தில் நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன; அதுபற்றி எடுக்க வேண்டிய நடவடிக்கைகளையெல்லாம் எடுத்து, கூடிய வரையில் அமைதியை நிலைநாட்டினோம்! நீதி விசாரணைக்கும் உடனே உத்தரவிட்டார் அண்ணா!"

வீரம் புரிந்த வெற்றித் திருநகர்!

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

1948-ம் ஆண்டிற்குள், போர் முற்கால தொழில் உற்பத்தி அளவை இந்நகர் எட்டிவிட்டது.

தொழில்--பண்பாட்டு நகர்

இன்றைய வால்காகிராடு, இரஷ்யக் கூட்டரசின் மிகப் பெரும் தொழில் கலாச்சார நகரங்களில் ஒன்றாகும்.

இடைவிடாது, வால்கா ஆற்றின் வழியே கப்பல்களும், இரயில்களும், உருக்கு—அலுமினியம்—எண்ணெய்—டிராக்டர்கள்—பல இயந்திரக் கருவிகள்—மருத்துவக் கருவிகள்—துளையிடும் கருவிகள்—உணவுப் பொருள்கள் ஆகியவற்றைச் சுமந்துகொண்டு, இந்நகரிலிருந்து நாட்டின் பல இடங்களுக்கும் செல்கின்றன.

வால்காகிராடின் தொழில் தரம் இன்று பெருமளவு வளர்ச்சி பெற்றுள்ளது.

இந்நகரில் 1,30,000 தொழிலாளர்களும், பொறியாளர்களும், தொழில் நுட்ப நிபுணர்களும், அலுவலக ஊழியர்களும் பணியாற்றுகின்றனர்.

போருக்கு முன்னர் இருந்ததைவிட, இன்று உற்பத்தி ஐந்து மடங்கு பெருகியுள்ளது; புரட்சிக்கு முந்திய நாட்களுடன் ஒப்பிட்டால் உற்பத்தி அளவின் அதிகரிப்பு 80 மடங்காகும்.

வால்காகிராடில் தயாரிக்கப்படும் பொருள்கள் 30 நாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன.

1965-ல் வால்காகிராடின் மக்கட் தொகை 7 இலட்சம் ஆகும். (போருக்கு முன்னர் 5 இலட்சம் பேர்). ஆண்டுதோறும் 14,000—15,000 குழந்தைகள் பிறக்கின்றன.

குடியிருப்புப் பரப்பு, போர்க் காலத்திற்கு முன்பிருந்ததைவிட இரட்டிப்பாகியுள்ளது (59,80,000 சதுர கெசம்); ஒவ்வோர் ஆண்டும் 9,000 குடியிருப்பு மனைகள் கட்டப்படுகின்றன.

வசதிகள்

குழந்தைகளுக்கான வசதிகளில் நகரம் பெரும் கவனம் செலுத்துகிறது. வால்காகிராடிலுள்ள 307 கிண்டர்கார்டன்களிலும், குழந்தை இல்லங்களிலும் 37,000 குழந்தைகள் பராமரிக்கப்படுகின்றனர்.

நகரில் 130 பள்ளிகள் உள்ளன; அவற்றில் 1,10,000 மாணவர்கள் பயிலுகின்றனர்; ஏழு இசைப் பள்ளிகளும், பள்ளிகளும், குழந்தை இரயில்வே—குழந்தைப் படகுத் துறை ஆகியவை, குழந்தைகளுக்கான சிறந்த பொழுதுபோக்கு வசதிகளை அளிக்கின்றன.

உயர் கல்விக்கான ஆறு நிலையங்களில் 17,000 மாணவர்களும், 16 உயர்நிலைத் தொழிற்நுட்பப் பள்ளிகளில் 11,000 பேரும் பயிலுகின்றனர். கல்வி அனைத்தும் இலவசமே!

நகரிலுள்ள 46 பாலிகிளினிக்குகள், 24 மகப்பேறு விடுதிகள், 4 குழந்தைகள் நலங்காப்புக் கூடங்கள், 43 மருத்துவ விடுதிகளிலும் மொத்தம் 15,000 மருத்துவர்களும், பயிற்சி பெற்ற பணிமகளிரும், பிற ஊழியர்களும் பணியாற்றுகின்றனர்; 10 குழந்தை உணவு நிலையங்களும், 66 மருந்துக் கடைகளும், 140 தொழிற்சாலை முதலுதவி நிலையங்களும் உள்ளன.

வால்காகிராடு நகரில் உள்ள பல விளையாட்டு அரங்குகளிலும், அனைத்து நாட்டுப் போட்டிகள் கூட நடைபெறுகின்றன.

வோல்காகிராடு, ஒரு முக்கியமான கலை—பண்பாட்டு நகராகும். அங்கு மூன்று நாடக அரங்குகளும், மூன்று பொருட்காட்சி அரங்குகளும், ஒரு பிளேனடோரியமும், ஒரு சர்க்கசும், டெலிவிஷன் நிலையமும், 17 திரை அரங்குகளும் இருக்கின்றன.

320 நூல்நிலையங்களிலும் உள்ள 35,00,000 நூல்களை, 3,00,000 பேர் ஒழுங்காகப் பயன்படுத்துகின்றனர்.

இன்றைய வால்காகிராடு நகரம் ஓர் அழகு கொழிக்கும் நகரமாகும்.

நட்புத் தழைகள்

வெளிநாடுகளிலுள்ள பல நகரங்களுடன் இந்த வால்கா நகர், நட்புறவுத் தழைகளால் பிணைக்கப்பட்டுள்ளது. நாஜிகளின் கொடிய விமானத் தாக்குதலுக்கு இலக்கான பிரிட்டனிலுள்ள காவென்டிரியுடன், இந்நகர் நெருங்கிய உறவு கொண்டுள்ளது.

போர்ப் பிற்காலத்தில், செக்கோஸ்லாவாக்கிய நகரான 'ஒஸ்டிராவா'வுடனும் இதன் தொடர்புகள் வளர்ச்சியடைந்தன. பிரெஞ்சு நகரான திஜோனுடனும், லத்தீன் அமெரிக்க நகரங்களில் சிலவற்றுடனும் இது உறவு கொண்டுள்ளது.

இந்தியக் குடியரசின் பிரதிநிதிகளுக்கு வால்காகிராடு என்றுமே உளங்கனிந்த வரவேற்பைத் தந்துள்ளது. ஜவகர்லால் நேரு, சவான் ஆகியோருக்கு இந்நகர மக்கள் கோலாகலமான வரவேற்பை அளித்துள்ளனர்.

சென்னை மாநகராட்சித் தூதுக்குழு ஒன்று, முன்னாள் மேயர் திரு. இரா. சம்பந்தம் தலைமையில், வால்காகிராடு நகருக்கு 1967 ஜூன் திங்கள் சென்றது; சென்னை—வால்காகிராடு நகரங்களுக்கிடையே சகோதர நகர உறவை நிறுவும் ஒப்பந்தம் ஒன்று அப்பொழுது கையெழுத்தாயிற்று.

வால்கா கிராடு நகரின் தோற்றம்

தொழில் வரி ரத்து

ஏப்ரல் 8-ம் நாள் முதல் பெங்களூரில், தொழில் வரி ரத்து செய்யப்பட்டிருக்கிறது.

சட்டமன்றத்தில், மைசூர் நகராட்சி நிர்வாக அமைச்சர் ஆர். எம். பட்டில் இதனை அறிவித்துள்ளார்.

உறுப்பினர் உரிமைச் சீட்டுகள்

கழகக் கிளைகளின்

செயலாளர்கள் --- அமைப்பாளர்களுக்கு

முக்கிய அறிவிப்பு

கழகக் கிளைகளிலிருந்து உறுப்பினர்களைப் பதிவு செய்து தலைமைக் கழகத்திற்கு உரிய கட்டணத்துடன் அனுப்பப்பட்டுள்ள தாள்களைத் தலைமைக் கழகத்தில் பதிவுசெய்து, உரிய உறுப்பினர் உரிமைச் சீட்டுகள் அந்தந்தக் கிளையின் செயலாளர் அல்லது அமைப்பாளர்களாகக் கையொப்பமிட்டு அனுப்பிய தோழர்களின் முகவரிக்கு அனுப்பப்பட்டுவிட்டன.

அவைகளைப் பெற்றுள்ள கழகக் கிளைகளின் செயலாளர்கள் அல்லது அமைப்பாளர்கள், உரிய உறுப்பினர்கள் அனைவருக்கும் அவரவர் சீட்டினை உடனடியாகக் கொடுத்துவிடுமாறு இதன்மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

கிளைகளுக்கான தேர்தல் நாளாகக் குறிப்பிட்டுள்ள நாளன்று முறைப்படி பதிவுசெய்யப்பட்டுள்ள எந்த உறுப்பினரும், தம்மிடம் உறுப்பினர் உரிமைச் சீட்டு அளிக்கப்படவில்லை என்ற குறைபாட்டுக்கு இடமில்லாத வகையில், கிளைகளின் செயலாளர்கள் அல்லது அமைப்பாளர்கள் ஆவனசெய்ய வேண்டுமெனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

—தலைமைக் கழகம் (தி.மு.க)

குளித்தலை நல்லசாமி அமெரிக்கப் பயணம்

சென்னை, ஏப். 17—

குளித்தலையைச் சேர்ந்த தோழர் என். நல்லுசாமி பி.ஏ.பி.எல். அவர்கள், அமெரிக்க அரசின் அழைப்பைப் பெற்றுக்கொண்டு ஏப்ரல் 20-ம் நாள் அமெரிக்கப் பயணம் மேற்கொள்கிறார்; ஆறு மாத காலம் அங்கு தங்கியிருப்பார்.

தி. மு. கழகத்தின் பேச்சாளர்களில்—வழக்கறிஞர்களில் ஒருவரான தோழர் என். நல்லுசாமி, விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர்; நச்சலூர் கிராம இளைஞர் தலைவராவார்.

அமெரிக்காவைச் சேர்ந்த 'நேஷனல் 4-எச். கிளப், வாஷிங்டன்' அழைப்பின்பேரில் அமெரிக்கப் பயணம் மேற்கொள்கிறார்.

இந்தியாவிலிருந்து செல்லும் பன்னிருவரில் ஒருவராகத் தமிழக அரசின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர், அமெரிக்காவில் அங்குள்ள கிராமிய சூழ்நிலை—விவசாயம்— கல்வி—சமூகத் தொண்டு ஆகியவற்றைக் கண்டறிவார்:

திருச்சியிலிருந்து ஏப். 21-ம் நாள் பிற்பகல் 2-30 மணிக்கு விமானமூலம் புறப்பட்டு டில்லிக்குச் சென்று அங்கிருந்து மே 4-ம் நாள் விமானமூலம் புறப்பட்டு, இலண்டன் சென்று மறுநாள் பாரிஸ் வழியாக வாஷிங்டன் அடைவார்.

சென்னை சட்டக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோது இலங்கை அரசின் அழைப்பின்பேரில், அங்கு நடந்த கிராம வளர்ச்சிக்கான அனைத்துலக மாணவர் மாநாட்டில் கலந்துகொண்டார். அதற்கு முன்பும் ஒரு முறை நல்லுசாமி இலங்கை சென்று வந்துள்ளார்.

முதலமைச்சர் அறிஞர் அண்ணா, பொதுப் பணி அமைச்சர் கருணாநிதி, வேளாண்மைத் துறை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி, உணவமைச்சர் கே. ஏ. மதியழகன் ஆகியோரிடம் தோழர் நல்லசாமி விடைபெற்றுக் கொண்டார்.

கருத்தடையில் இந்தியாவின் சாதனை

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தில், இந்தியா ஒரு சாதனையை ஏற்படுத்தியிருக்கிறது.

உலகில் மொத்தம் நடந்த கருத்தடை அறுவைச் சிகிச்சைகளில் 50 சதவிகிதத்திற்கும் அதிகமாக இந்தியாவில்தான் நடைபெற்றுள்ளன.

இந்தியாவில் 'லூப்' பொருத்திக் கொண்ட பெண்களின் எண்ணிக்கை உலகின் பிற பகுதிகளைச் சேர்ந்த பெண்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருக்கிறது.

1967-68-ம் ஆண்டில் இந்தியாவில் 10 இலட்சம் பேர், தாமாகவே கருத்தடை செய்துகொள்ள முன்வந்தனர்.

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் அமுலுக்கு வந்ததிலிருந்து 40இலட்சம் பேர் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்துகொண்டனர்.

கல்வி—தொழில் அமைச்சர்

இரா. நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

ஏப். 20: காலை 10 மணி: வாலாஜாபேட்டை—அரசினர் மகளிர் கல்லூரிக் கட்டிட அடிக்கல் நாட்டல்; 11 மணி: நகராட்சி வரவேற்பு; 11-30 மணி: ஊராட்சி ஒன்றிய வரவேற்பு; பகல் 12 மணி: ஆசிரியர் சங்க ஆண்டு விழா; பிற்பகல் 2-30 மணி: ஆற்காடு—தலைமைத் தமிழ் வளர்ச்சி மன்றத் துவக்கம்; மாலை 4 மணி: குடியேற்றம்—திருமகள் ஆலை உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கல்; 4-30 மணி: திருமகள் கல்லூரிக் கட்டிட அடிக்கல் நாட்டல்; மாலை 6 மணி: பசுமாத்தூர்—பள்ளிக் கட்டிடத் திறப்பு; இரவு 7 மணி: காட்பாடி பொதுக்கூட்டம்.

ஏப். 21: பிற்பகல் 3-30 மணி: ஏத்தாப்பூர் — ஊராட்சி ஒன்றிய மேல்நிலை குடிநீர்த் தொட்டி திறப்பு; மாலை 5 மணி: சேலம்—குருடர் பள்ளி நிகழ்ச்சி; 6 மணி: குகை நெசவாளர் சங்க சாயப் பட்டரை புதிய கட்டிடத் திறப்பு; இரவு 7-30 மணி: பொதுக்கூட்டம்.

ஏப். 22: காலை 9-30 மணி: பாப்பாரப்பட்டி—பெண்கள் உயர்நிலைப் பள்ளி விஞ்ஞானக்கூடத்திற்கு அடிக்கல் நாட்டலும், ஊராட்சி வரவேற்பும்; 10-30 மணி: மாக்சனூர் — பள்ளிக் கட்டிடத் திறப்பு; பகல் 12 மணி: தர்மபுரி—மாவட்ட ஆசிரியர் சங்க ஆண்டு விழா; பிற்பகல் 3 மணி: நாயக்கன் கொட்டாய்—ஊராட்சி கட்டிடத் திறப்பு; மாலை 4 மணி: பெரிய குரும்பட்டி — பள்ளிக் கட்டிடத் திறப்பு; 5: மணி: நடுஹள்ளி—பள்ளிக் கட்டிடத் திறப்பு; 6 மணி: மூக்கனூர் ஒட்டப்பட்டி—பள்ளிக் கட்டிடத் திறப்பு; இரவு 7 மணி: கடத்தூர்—கால்நடை மருத்துவமனைத் திறப்பு; 8 மணி: தாளநத்தம் — ஊராட்சிக் கட்டிடத் திறப்பு; 9 மணி: அரூர்—உயர்நிலைப் பள்ளியில் திருவள்ளுவர் சிலைத் திறப்பு.

ஏப். 23: காலை 9 மணி: பாலக்கோடு—பள்ளி விஞ்ஞானக் கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டல்; ஊராட்சி வரவேற்பு; 10 மணி: மாரண்டஹள்ளி—பள்ளி விஞ்ஞானக்கூடத் திறப்பு; ஊராட்சிக் கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டல்; உயர்நிலைப் பள்ளி ஆண்டு விழா; பிற்பகல் 2 மணி: மத்தூர்—ஆசிரியர் சங்க ஆண்டு விழா; 3 மணி: பாரூர் — திருவள்ளுவர் சிலை திறப்பு; மாலை 4 மணி: காவேரிப்பட்டினம்—உயர்நிலைப் பள்ளிக் கட்டிடத் திறப்பு; 6 மணி: கிருஷ்ணகிரி—மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகக் கட்டிடத் திறப்பு; இரவு 7-30 மணி: உயர்நிலைப் பள்ளி இலக்கிய மன்றக் கூட்டம்.

தலைமைக் கழக அறிக்கை

கழக நிர்வாகிகளுக்கு

முக்கிய அறிவிப்பு

அண்மையில் நடைபெறவிருக்கும் கழகப் பொதுத் தேர்தலையொட்டி ஆங்காங்குள்ள கிளைக் கழக நிர்வாகிகள், 25 4—68-ஆம் நாளுக்குள் தங்கள் தங்கள் கிளையின் செயற்குழுக் கூட்டத்தைக் கூட்டி, கழகத்தின் குறிப்புப் புத்தகம், கணக்குப் புத்தகம், மற்றும் கடிதப் போக்குவரத்து சம்பந்தப்பட்ட முக்கிய கட்டுகள், உறுப்பினர் பற்றிய கிளைக் கழகப் பட்டியல், கிளையின் நிதி இருப்புத் தொகை, மற்றும் மரச் சாமான்கள், படங்கள் போன்ற சொத்துக்களை இன்னின்னதென ஆய்ந்துத் தெளிந்து, அடுத்துத் தேர்ந்தெடுக்கப்படும் நிர்வாகிகளிடம் ஒழுங்குற ஒப்படைக்கும்வகையில் செவ்வனே முடிவுசெய்து வைத்துக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

அந்தந்த மாவட்ட—வட்டச் செயலாளர்களும் இதுபற்றி கிளைகளுக்கு அறிவித்து ஆவனசெய்யுமாறு கேட்டுக்கொள்வதுடன், மாவட்ட— வட்டச் (சென்னையில் பகுதி) செயலாளர்களும் இதுபோன்றே தங்கள் அமைப்பைக் கூட்டி ஆவனசெய்ய வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

'அறிவகம்', சென்னை-13
18—4—68

—தலைமைக் கழகம் (தி மு.க.)

பாலர் அரங்கம்

ஏப்ரல் 19, 20, 21-ந் தேதிகளில்
மாலை 4 மணிக்கு
"காஸ்டவேஸ்"
(வால்டிஸ்னியின் திடுக்கிடும் காட்சிகள் நிறைந்த கலர் படம்)
கட்டணம் வழக்கம்போல்

சென்னை நிகழ்ச்சி பற்றிய விசாரணை

சாட்சியமளிப்போருக்கு அறிவிப்பு

சென்னை, ஏப். 18—

சென்னை நகரில் மாணவர்களுக்கும்–பஸ் தொழிலாளர்களுக்கு மிடையே ஏற்பட்ட மோதல் பற்றிய எல்லா அம்சங்களையும் விசாரிப்பதற்கான குழு, ஏற்கனவே அறிவித்தபடி, ஏப்ரல் 22-ம் நாள் விசாரணை தொடங்கும்.

பல்கலைக் கழகத் தேர்வுகள் முடியும்வரையில் தாங்கள் சாட்சியமளிக்க வசதிப்படாது என்று சில மாணவர்கள் தெரிவித்ததையொட்டி, மாணவர் அல்லாதாரின் சாட்சியங்களை முதலில் பதிந்து கொள்வதென்றும், பின்னால் மாணவர்களின் சாட்சியங்களைப் பதிந்துகொள்வதென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

சாட்சிகளின் பட்டியலை அனுப்புவதற்கான நாளை நீட்டிக்குமாறு கோரிக்கைகள் வந்துள்ளன. சாட்சிகளின் பெயர்களை ஏப்ரல் 30-ம் நாள்வரை அனுப்பிவைக்கலாம் எனப் பொதுமக்களுக்குத் தெரிவிததுக்கொள்ளப்படுகிறது.

மே நாள் விழா

சர்வ கட்சித் தலைவர்கள் -- தொழிற் சங்க அமைப்புகள் ஆலோசனைக் கூட்டம்

சென்னை, ஏப். 18—

உலகப் பாட்டாளி மக்களின் உரிமைத் திருநாளாய் விளங்கும் மே நாள் விழாவை 1968 மே முதல் நாளன்று, தமிழகமெங்கும் சீரும் சிறப்புமாகக் கொண்டாடுவதற்குத் தமிழகத்திலுள்ள சர்வ கட்சித் தலைவர்களும், தொழிற் சங்கப் பிரதிநிதிகளும் கலந்துரையாடித் திட்டம் வகுத்துச் செயல்படுவதற்கான ஆலோசனைக் கூட்டமொன்று 19—4—68 மாலை 5 மணிக்கு சென்னையில் நடைபெறவிருக்கிறது.

சர்வ கட்சித் தலைவர்களும், தொழிற் சங்கப் பிரதிநிதிகளும் கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

---என். வி. நடராசன்
கன்வீனர்

ஊதியக் குழு சிபாரிசுகளை

அமுலாக்க வற்புறுத்த.....

10,000 தொழிலாளர் டில்லி செல்கின்றனர்

600 மைல் நடக்கின்றனர்

போபால், ஏப். 18—

நிலக்கரித் தொழிலாளர் ஊதிய போர்டின் சிபாரிசுகளை நிறைவேற்ற வேண்டுமென வற்புறுத்துவதற்காக இங்கிருந்து 10,000 நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்கள், கால் நடையாகப் புதுடில்லிக்கு (600 மைல் தூரம்) சென்று கொண்டிருக்கிறார்களாம்!

ஒரு திங்களுக்குள் அவர்கள் புதுடில்லிக்குப் போய்ச் சேர முடியுமாம். தலைமையமைச்சர், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் ஆகியோர் இல்லங்களுக்கு எதிரில் ஆர்ப்பாட்டம் செய்வார்களாம்.

சர்குஜா மாவட்டத்தில் மூன்று இடங்களிலுள்ள நிலக்கரிச் சுரங்கங்களைச் சேர்ந்த அந்தத் தொழிலாளர்கள், தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி ஒரு மாத காலமாக வேலை நிறுத்தம் செய்துவருகிறார்களாம்.

சர்க்கரை விலையைக் குறைக்க நடவடிக்கை

புதுடில்லி, ஏப். 17—

இரண்டு இலட்சம் டன் சர்க்கரை விடுவிக்குமாறு மத்திய அரசு உத்தரவு பிறப்பித்திருக்கிறது; இதில் 1.10 இலட்சம் டன் சர்க்கரை மாநில அரசுகளுக்குக் கிடைக்கும்.

90,000 டன், ஏப்ரல் 23-ம் நாள் முதல் பகிரங்க விற்பனைக்காக விடுவிக்கப்படும்.

நடக்க இருப்பவை

19--4--68

திருக்கண்ணங்குடி

தி.மு.க. சார்பில் மாலை 6 மணிக்கு; தலைவர்: இரா. வேதையன்; பேசுவோர்: பெ. சீனிவாசன் எம்.எல் ஏ., அ. இராசகோபால், ச. தியாகராசன் பி.ஏ., பி.எல்., கு. கணபதி, ச. கலையழகன், பொ. கணபதி, பெ. இலட்சுமணன், வீ. காத்தமுத்து, வீ. முருகையன்.

20--4--68

ஆலந்தூர்

தி மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு ஆசர்கானு திடலில்; தலைவர்: கோவிந்தராசன்; பேசுவோர்: வெ. கண்ணன், சைதை சம்பந்தம் எம்.சி., எஸ். பாலன், கா.ர. கோதண்டராமன், சி.கே. ராயன், எம். அருமைநாதன், மற்றும் பலர்.

சென்னை 80-வது வட்டம்

கலைஞர் கருணாநிதி நற்பணி மன்றச் சார்பில் மாலை 7 மணிக்கு கிருஷ்ணாம்பேட்டை நடுக் குப்பத்தில் (அரசி மேரி கல்லூரி அருகில்); பேசுவோர்: ஏ.வி.பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., சி. சிட்டிபாபு எம்.பி., இளம்பரிதி, எஸ். ஆனந்தன், மற்றும் பலர்.

சேங்கனூர்

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிகளு அண்ணா தெருவில்; தலைவர்; மா. சம்பத் மணி; பேசுவோர்: ம. கோ. மணி, கோவி. நாராயணசாமி, து. ஆதிமூலம், பி. கோவிந்தசாமி, எஸ். முருகேசன், எஸ். கலியபெருமாள், பி. மகாலிங்கம், ஆர். இரத்தினசாமி (சென்னை மணிவண்ணன்—குமாரி பத்மினி குழுவினரின் 'புயலுக்குப் பின்' என்ற கலைநிகழ்ச்சி நடைபெறும்)

லால்குடி

பொன்னம்பலனார் படிப்பகச் சார்பில் மாலை 6-30 மணிக்கு கீழவீதி பெரியார் திடலில்; தலைவர்: எல். கே. குழந்தைவேல்; பேசுவோர்: அன்பில் தர்மலிங்கம், மு. க. து. நடராசன் எம்.எல்.ஏ., ஆர். நாகசுந்தரம் எம்.எல்.ஏ., கோபால், எஸ். கே. சிங்காரம், ப. சம்பந்தம். (மதுரை கண்ணம்மா — தங்கராசு குழுவினரின் கலைநிகழ்ச்சி நடைபெறும்)

சித்தாநல்லூர்

தி. மு. க. சார்பில் மாலை 6-30 மணிக்கு அண்ணா அரங்கில், தலைவர்: கி. சண்முகசுந்தரம்; பேசுவோர்: பெ. சீனிவாசன் எம்.எல்.ஏ., ச. தியாகராசன் பி.ஏ.பி.எல்., காட்டூர் வி. இராமையா, மற்றும் பலர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13.) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.